## அம்பலாங்கொடை பிரதேச சபை
## காலி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அம்பலாங்கொடை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகளைத் தயாரிக்கும் போது சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 61,480 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் நூலகப் புத்தகங்கள் கொள்வனவின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 116,473 ஆன கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 139,833 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,712,708 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,880,388 ஆன பங்கிளப்பு தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 68,189,265 கூட்டுத்தொகையான 06 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) ரூபா 2,186,457 தொகையான அரச மானியங்கள் கணக்கின் மீதி மற்றும் ரூபா 37,215,292 தொகையான மூலதன கடன்கொடுத்தோர் கணக்கின் மீதியை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நானாவித வைப்புக்கள் மீதிக்கு உள்ளடக்கப்பட்ட உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 15,525 ஆன முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 137,895,235 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள், மோட்டார் வண்டிகள் மற்றும் வண்டில்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் அணிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் ரூபா 108,048,450 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக முறையாக பேணப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபா 3,146,820 தொகையான ஊழியர் கடன் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக போது சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 10,331,101 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,379,205 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,951,896 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மூலதனம் வருமானம் ரூபா 20,000,000 மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 26,100,000 என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், வருமானத்தை விஞ்சிய செலவினத்திற்காக பணத்தை உழைக்கக்கூடிய முறை தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மீண்டுவரும் செலவினத்தில் 15 சதவீத குறைவொன்று தென்பட்ட போதிலும், மீண்டுவரும் வருமானத்தில் 82 சதவீத அளவில் மீண்டுவரும் செலவினம் இருந்தமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவினம் மிகவும் உயர் மட்டத்தில் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளுக்குரிய வருமான உதவிகள், சுய வருமானமீட்டல் மற்றும் மீண்டுவரும் செலவினம் தொடர்பான பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான மானியம் | சுய வருமான ஈட்டல் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய வருமானமீட்டல் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 56,285,585 | 25,468,240 | 30,817,345 | 45,954,484 | 15,137,139 |
| 2014 | 40,991,555 | 18,658,331 | 22,333,224 | 39,612,350 | 17,279,126 |
| 2013 | 43,069,914 | 12,492,108 | 30,577,806 | 30,408,965 | (168,841) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் வருமான மானியங்களின் பெறுவனவுகளில் தொடர்ச்சியான அதிகரிப்புடனும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுய வருமானமீட்டல் வருமானங்களிலும் அதிகரிப்பொன்று தென்பட்டன.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்திருந்த போதிலும், அந்நிலைமையை இனங்கண்டு மீண்டெழும் செலவின்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் சபையின் சுய வருமானமீட்டல் வருமான அளவினை விஞ்சி ரூபா 15,137,139 ஆன மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது.

(iv) சபைக்கு வருமான மானியம் கிடைக்காமல் இருந்தால் சபையின் மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு எவ்வித இயலுமையும் இல்லையென தென்பட்டது. அது நிதி முகாமைத்துவம் தொடர்பான திருப்திகரமான நிலைமையொன்றல்ல என்பது கணக்காய்வின் கருத்தாகும்.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 190,374 ஆன ஏக்கர் வரியில் ரூபா 671 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. நிலுவை பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் முறையான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ரூபா 460,604 ஆன வாடகையை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 11,591,945 உம் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 2,242,302 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) பதவியணியினர் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்த மிகை பதவியணியினர் 13 ஆக இருந்தது. மிகை பதவியணியினரை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை பூர்த்தி செய்வது தொடர்பிலும் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 83,230 கூட்டுத்தொகையும் சேவையிலிருந்து விலகிச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 40,374 ஆன

நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.2 படபொல மயான பூமியைப் பராமரித்தல்

படபொல மயான பூமியை சுத்திகரித்தல் மற்றும் மண் நிரப்புதல் என்பவற்றிற்காக 2015 ஆம் ஆண்டினுள் ரூபா 754,336 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலைகள் தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 169 மற்றும் 170 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 177 ஆம் விதியுடன் இணங்காமல் சபையினால் மேற்படி நிர்மாண வேலைக்காக சேவை வழங்குனர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 179 ஆவது விதிக்கு இணங்க நிர்மாண வேலைகள் தொடர்பாக சேவை வழங்குனருடன் எவ்வித ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்மாண வேலைக்காக JCB இயந்திரம் மற்றும் எஸ்கவேட்டர் இயந்திரம் என்பவற்றைப் பயன்படுத்தும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படாதிருந்தமை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வருகை பதிவேடு, எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டன.

(ஈ) சேவைகள் வழங்குவதற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த எந்தவொரு பற்றுச்சீட்டிலும் வேலை பரிசோதகரின் பெயர் இடப்படாதிருந்ததுடன் 41 பட்டியல்களுக்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக சான்றுறுதிப்படுத்தாமல் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

# 4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கிய செலவின விடயமொன்றில் ரூபா 10,000 கூட்டுத்தொகையான மொத்த ஏற்பாடும், ஏனைய 04 செலவின விடயங்களில் ரூபா 5,558,771 சேமிப்பும் மூன்று செலவின விடயங்களில் வரையரையை விஞ்சி ரூபா 8,255,255 தொகையான செலவினமும் 02 வருமான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 73,812 வருமானமும் 05 வருமான விடயங்களில் இலக்கிடப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 6,975,416 தொகை காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ/லே ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 420,104 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற சொத்துக்கள்

சபை வளவில் சிதைவடைந்து காணப்படுகின்ற 02 கை உழவு இயந்திரங்களும் மோட்டார் வண்டியொன்றும் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு
(ஊ) மனித வள முகாமைத்துவம்